
## திராவிடத்தால் வாழ்கிறோம்

**1323**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## பொய்ப்பெட்டி

**கோவி.லெனின்**

**128**

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# தொழில் முதலீடுகளை ஈர்க்கவா? தொந்தரவா?

‘திராவிட மாடல் ஆட்சி’யில், இந்திய மாநிலங்களிலேயே தமிழ்நாடு, தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சி கொண்ட மாநிலமாக இருந்தது. அதற்கான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, திராவிட நாயகரான மு.க.ஸ்டாலின் வெளிநாடு சென்றபோது விமர்சித்த கூட்டம், தற்போது விஜய் மேற்கொண்ட இங்கிலாந்துப் பயணத்திற்கு என்ன சொல்கிறது?

“நான் அழைத்ததால் என் நண்பர் - முதலமைச்சர் ஜோசப் விஜய் வந்தார்” என்று சொல்லி.. நன்றி தெரிவித்திருக்கிறார், நடிகர் அஜித்குமார். அவர் பங்கேற்ற கார் ரேஸுக்குச் சென்று கொடியசைத்தார், விஜய். எனவே, விஜய் முதலமைச்சரான பிறகு மேற்கொண்ட முதல் வெளிநாட்டுப் பயணம் என்பது சினிமா துறை நண்பருக்காக, சினிமா ஷூட்டிங் பாணியிலானது என்பதை உறுதிசெய்யும் வகையில், விஜய்யின் திரைத் துறை சார்ந்த நண்பர் - நண்பிகளே அருகில் இருந்ததை, லண்டனிலிருந்து வெளியான புகைப்படங்கள் - வீடியோக்கள் ஆகியவையே உறுதிப்படுத்துகின்றன. விஜய் அங்கே போனார், இங்கிலாந்தில் உள்ள ரசிகர்கள் அங்கே குவிந்தனர். விஜய் இங்கே போனார், ரசிகர்கள் இங்கே குவிந்தனர் என்பவைதான் செய்திகளாக வெளியானதே தவிர, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, விஜய் எந்தெந்த நிறுவனங்களுக்குச் சென்றார், என்னென்ன புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டார், எவ்வளவு முதலீடுகளை ஈர்த்தார், எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்



என்பது பற்றி, விஜய் பயணம் மேற்கொண்டு மூன்று நாட்கள் ஆனவரை எந்த அதிகாரபூர்வ தகவலும் வெளியாகவில்லை.

தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள், தொழில்துறை சார்ந்தவர்கள், சமூக வலைதளச் செயல்பாட்டாளர்கள், விஜய்யின் இங்கிலாந்துப் பயணத்தின் நோக்கம் என்று தொடர்ச்சியாகக் கேள்விகள் கேட்ட பிறகு, முதலீடுகளை ஈரப்பதற்காகத்தான் பயணம் செய்தார் முதலமைச்சர் என்று காட்டுவதற்காக, ‘சம்வர்தனா மதர்சன்’ என்ற நிறுவனத்துடன் 11ஆயிரம் கோடி ரூபாய்க்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது தொடர்பான படங்கள் வெளியாயின. இதன்மூலம் 7,000 பேருக்கு தமிழ்நாட்டில் வேலை கிடைக்கும் என்றும், அரசுத் தரப்பிலிருந்து தெரிவிக்கப் பட்டது. ஸ்டிக்கர் ஒட்டுவதையே வேலையாகக் கொண்டிருக்கும் த.வெ.க. ஆட்சியின் மற்றொரு ஸ்டிக்கர்தான் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

‘சம்வர்தனா மதர்சன்’ நிறுவனம், கலைஞர் ஆட்சிக் காலத்திலேயே தமிழ்நாட்டிற்கு வந்துவிட்டது. சென்னை அருகேயுள்ள ஒரகடத்தில், 30-க்கும் மேற்பட்ட யூனிட்டுகளுடன் இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது. மின்னணுச் சாதனங்கள் உற்பத்திக்கான ஊக்கத்தொகையைப் பெறுவதற்கான தகுதியும், இந்திய ஒன்றிய அரசின் மூலமாக இந்த நிறுவனத்திற்குக் கிடைத்துள்ளது. கடந்த 2024-ஆம் ஆண்டு, தன்னுடைய நிறுவனத்தின் விரிவாக்கத்திற்காக 1,800 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை, திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்திட்டது. தற்போது, ஒன்றிய அரசின் ஊக்கத்தொகை கிடைப்பதால், மேலும் கூடுதலாக முதலீடு செய்ய முன்வந்துள்ளது, அவ்வளவுதான்.

ஒரகடத்தில் செயல்பட்டுவரும் நிறுவனத்திற்கு, லண்டனில் போய் ஒப்பந்தம் போட்டிருக்கிறார், விஜய். அதுவும் விரிவாக்கம் தொடர்பான முதலீடுதான். அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான புகைப்படங்களில் தொழில் துறை அமைச்சரைக் காணோம். தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, வெளிநாடு சென்ற விஜய் ஏன் தொழில் துறை அமைச்சரை அழைத்துச் செல்லவில்லை?, ஏற்கெனவே இந்தோனேஷியா போன்ற நாடுகளில் எந்தெந்த கம்பெனி முன்பாக தொழில் துறை அமைச்சர் புகைப்படம் எடுத்தாரோ, அந்த நிறுவனங்களின் முதலீடுகள் ஆந்திராவுக்கும் பிற மாநிலங்களுக்கும் போய்விட்டதாலா அல்லது தனது திரைத் துறை நண்பரின் கார் ரேஸ் விளையாட்டுப் போட்டிக்குச் சென்றதால், விளையாட்டுத் துறை அமைச்சரே போதும் என முடிவு செய்துவிட்டாரா?

முடிவுகளையாவது விஜய்தான் எடுக்கிறாரா அல்லது அவரை மீறிய சக்தியாகச் செயல் படுபவர் கள்தான் எடுக்கிறார்களா?

**...வினா தொடரும்.**

## ‘நாடகம்’ ஆரம்பம்!

‘சரியாக இடைத்தேர்தலுக்கு முன், மத்திய குற்றப்பிரிவு போலீஸார் ரெய்டு செய்கிறார்கள் எனில், இது ஏற்கெனவே திட்டமிட்டது போல உள்ளது’ என முகநூலில் தனது கருத்தைப் பகிர்ந்துள்ளார், எழுத்தாளர் அபிலாஷ் சந்திரன்.

அவரது பதிவில்...

த.வெ.க. அரசின் ‘நிர்வாகப் போதாமை’, ‘ஊழல் புகார்கள்’, ‘வாக்குறுதிகளை நிறைவேற்றாமை’, ‘மின்தட்டுப்பாடு, ‘மின்கட்டண உயர்வு’ எனப் பல பிரச்சினைகளால், மக்கள் கோபத்தில் இருக்கிறார்கள். இடைத்தேர்தலில் தம் சாதனைகளைச் சொல்லி, த.வெ.க.வால் பிரச்சாரம் பண்ண இயலாது. ஒரே வழி, கவனம் திருப்பி உணர்ச்சிகளைத் தூண்டிப் பிரச்சாரம் பண்ணுவது. இடைத்தேர்தலில் த.வெ.க. முழுக்க முழுக்க தி.மு.க.வின் ஊழல் புகார்களைப் பற்றியே பேசப்போகிறது. தன்னுடையது ஊழலற்ற ஆட்சி, தி.மு.க. ஊழல் ஆட்சி செய்தது என, விஜய் கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணப்போகிறார். எப்படியும் வழக்கில் ஆதாரம் இல்லையென, அன்பில் மகேஷை விடுதலை பண்ணுவார்கள். அப்போது, இன்னொரு வழக்கை தி.மு.க. மீது இவர்களோ மத்திய அரசை வைத்தோ பதிவு பண்ணுவார்கள். அதுவும் பின்னர், நீதிமன்றத்தால் கேள்விக்கு உள்ளாக்கப்படும்.

இப்படியே ஐந்தாண்டுகளை ஓட்டுவார்கள்.

பா.ஜ.க. இன்னொருபக்கம், த.வெ.க. அரசை விமர்சித்து, கலாய்த்து, ட்ரோல் பண்ணிக்கொண்டும் இருக்கிறார்கள். அவர்களுடைய மாநிலத் தலைவர் விஜய்யை மானாவாரியாக அவமதிக்கிறார். ஆனால், த.வெ.க. அதற்குப் பதிலே அளிப்பதில்லை. த.வெ.க.வை இப்படி ஒரு பக்கம் அடித்துக் கொண்டும், இன்னொரு பக்கம் ஆதரித்துக்கொண்டும், அவர்களைக் கொண்டு தி.மு.க.வைப் பலவீனப்படுத்திவிட்டு, அடுத்து - த.வெ.க. VS பா.ஜ.க. எனத் தேர்தல் கதையாடலை உருவாக்கி, கடைசியில் விஜய் எனும் பொம்மையைத் தரையில் போட்டு உடைப்பார்கள்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## வலையோசை



**Rajan Kurai Krishnan**

"சார், நாங்க நொய்டாலேர்ந்து பேசறோம், தமிழ்நாட்டிலே முதலீடு பண்றோம்."

"சரி, அப்ப லண்டனுக்கு வந்துடுங்க."

"ஏன் சார்?"

"அங்க வச்சு அக்ரிமெண்ட் போட்டாதான் அந்நிய முதலீடு இல்லீங்களா?"



**Karuppu Neelakandan**

த.வெ.க.வை ஆதரிப்பதற்கு, இன்னும் இரண்டு எம்.எல்.ஏ.க்களை தாருங்கள் என சி.பி.எம்., சி.பி.ஐ. கேட்பது எப்படி தமிழ்நாட்டை இடது பக்கம் திருப்புவதாக மாறும்?


ஒரு படத்துல நடிகர் அஜீத் ஆட்டோ கண்ணாடியைத் திருப்பிட்டு, ஸ்டார்ட் பண்ணா வண்டி ஓடுமே, அந்த மேறீயா?



**Arun Kumar**

என்ன, லண்டன் பிரதமர் சார் பயமா! எங்க வளர்ச்சியைப் பார்த்து பயமா? எங்க வளர்ச்சியைத் தடுக்கப் பார்க்குறீங்களா...



**Prince**

"Britain is not India"
"Britain is not a film set"
- News Buzz UK

லண்டன் காவல் துறையிடம் முறையான அனுமதி பெறாமல், கூட்டப்பட்ட கூட்டம்.

Video 1: விஜய் பாதுகாவலர்களில் ஒருவர், 4 மணிக்குப் பார்க்கலாம் என்கிறார்.

Video 2: அனுமதியின்றி கூட்டப்பட்ட கூட்டம் என்பதால், லண்டன் காவல் துறை அறிவுறுத்தல்படி கலைந்து செல்லும்படி, தமிழ்நாட்டில் இருந்து சென்ற பாதுகாப்பு அதிகாரி சொல்கிறார்.

Video 3: News Buzz UK செய்தியில் - முதல்வர் மற்றும் தமிழ்நாட்டில் இருந்து சென்று லண்டனில் இருக்கும் தமிழர்களுக்கு, ஒழுக்கப் பாடம் எடுக்கிறார்கள். அதில் சொல்லி இருக்கும் வார்த்தைகள்...

"Britain is not India"
"Britain is not a film set"

இதில் கவனிக்கவேண்டியது:

1. அனுமதியின்றி கூட்டம் கூட்டி, மாஸ் ரீல்ஸ் எடுத்து என்ன சாதிக்க நினைக்கிறார்கள்?

2. விஜய் தங்கி இருக்கும் Hotel எதிரில், மருத்துவமனை இருக்கிறது. அதன் முன் கூடி TVK.. TVK என்று சத்தமிட்டு, பொது அமைதியைக் கெடுத்து இருக்கிறார்கள்.

3. நடிகராகச் செல்லவில்லை. தமிழ்நாட்டின் முதல்வராக அரசு முறைப் பயணமாகச் சென்றவர், அந்த நாட்டின் சட்டங்களை மதித்து, நடந்திருக்க வேண்டாமா?

நல்லவேளை, அங்கு தி.மு.க. இல்லை. இல்லை என்றால் கரூர் போன்றே இதற்கும் தி.மு.க.தான் காரணம் என்று சொல்லியிருப்பார்கள்.



**Murugesh**

30+ ஆண்டுகள் திரைத் துறையில் இருந்தவர். படப்பிடிப்புக்காகவும் விடுமுறைக்காகவும் மற்றும் பல காரணங்களுக்காகவும் பலமுறை இங்கிலாந்து சென்றிருப்பார். அப்போது எங்கு சென்றார்? எங்கு தங்கினார் என்று யாரும் எந்தக் கேள்வியும் கேட்கவுமில்லை, கண்டுக்கவுமில்லை.

ஆனால், இன்று அவர் வகிப்பது ஒரு அரசியலமைப்புச் சட்டப் பதவி.

தனிப்பட்ட விளம்பர ஆசைக்காக அந்தப் பதவியின் கண்ணியத்தை மட்டுமல்ல, நாட்டின் நற்பெயரையும் கேள்விக்கு உள்ளாக்கும் நிலை ஏன்?

வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இது ‘தமிழ்நாட்டைச் சேர்ந்த அரசியல்வாதி’ என்ற அளவில் தெரியாது. இந்தியாவின் ஒரு மாநிலத் தலைவர் லண்டன் தெருக்களில் ஏற்படுத்திய குழப்பம் என்றுதான் தெரியும்.

தனிப்பட்ட புகழுக்காகப் பொதுப் பதவியின் மரியாதையையும், நாட்டின் மதிப்பையும் பணயம் வைக்கவேண்டுமா?

பதவி உயர்ந்தால் பொறுப்பும் உயர வேண்டும். புகழ் தேடும் வேகம் நாட்டின் கண்ணியத்தை மிஞ்சிவிடக் கூடாது!

## ஃப்ளாஷ்பேக்



டி.ஜி.பாபு



### செயல்வீரர்கள் கூட்டம்!

2016-ஆம் ஆண்டில், கும்மிடிப்பூண்டி கழக மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டம், அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் தலைமையில் அலமாதியில் நடைபெற்றது. அப்போது, சுதர்சனம் அவர்கள் மாவட்டப் பொறுப்பாளராக இருந்தார். கூட்டத்தில், கும்மிடிப்பூண்டி கழக மாவட்டச் செயலாளராக இருந்த, மறைந்த கி.வேணு, கழகக் கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர், கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகளும் வருகை தந்திருந்தனர். அந்த நிகழ்ச்சியின்போது எடுக்கப்பட்ட படம்.

**- டி.ஜி.பாபு,**
**கலை இலக்கிய அணி, ஒன்றியத் துணை அமைப்பாளர்,**
**கும்மிடிப்பூண்டி கிழக்கு ஒன்றியம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### சாமானியர்களை உயர்த்தும் பொறுப்பு!

18.11.1967 அன்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில், பேரறிஞர் அண்ணா சிறப்புரையாற்றினார். மாணவர்கள், “பலரின் தியாகத்தால் மிகச் சிலர் சிறப்பு மிகுந்த அறிவுக்கண் பெறுகின்றனர்! குறிப்பாக, சமூகத்தின் உழைப்பால் உருவான செல்வத்தின் பயனைப் பெற்று பட்டதாரிகள் ஆகிய நீங்கள், உங்களுக்காகத் தினையளவேனும் தியாகம் செய்த அந்தப் பெரும்பான்மை மக்களுக்கு என்ன நன்றிக்கடன் செலுத்தப்போகிறீர்கள்?” என்று கேட்டார். ‘அறிவு என்பது தனிமனித உயர்வுக்கான ஏணி மட்டுமல்ல; சாமானியனை உயர்த்துவதற்கான பொறுப்பு’ என்பதே, அண்ணா பட்டதாரிகளுக்கு அளித்த பாடம்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900